لا إله إلا الله محمد رسول الله        إن الدين عند الله الإسلام

# Friday Sermon

*26 October 2018*
*(16 Safar 1440 AH)*

## "FAITH (IMAN) IN THE HOUR"

## "இறுதிநாளின் மீதான நம்பிக்கை"

**(Tamil version -** தமிழ் பதிப்பு)



**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**

*Munir Ahmad Azim*

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைக்கும் என்று இஸ்லாம் நமக்கு கற்பிக்கின்றது. ஒரு நபரின் மரணத்திற்கு பிறகு, அவரது ஆத்மா, நம்மில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு உலகில் வாழ்கிறது. அவ்வுலகினை நாம் "பர்ஸக்" என்று அழைக்கிறோம். தீர்ப்பு நாள் வரையில் நாம் அவ்வுலகில் வாழுகிறோம். தீர்ப்புநாளினில், இறுதிகணக்கிற்காக எல்லோரும் அல்லாஹ்வால் ஒன்று சேர்க்கப்படுவார்கள். உண்மையான நம்பிக்கையாளர் சொர்க்கத்திலும் மோசமான நம்பிக்கையாளர் நரகத்திலும் நுழைவார்கள். இக்காரியத்தின் மீதான நம்பிக்கை என்பது இஸ்லாமின் தூண்களில் பட்ட ஒன்றாகும். ஆகையால் ஒரு நம்பிக்கையாளர் இக்காரியத்தைப் பற்றி விழிப்புணர்வை பெறுவதுடன் அதில் திட நம்பிக்கை கொள்ள வேண்டியதும் அவசியம்.

சரியாக கூறினால், ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த நியாயத் தீர்ப்பு நாளுக்கு சாட்சியாக இருப்பார் என்பதை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். அவர் இறக்கும் தருணத்தில் அவர் வாழ்ந்திருந்த காலப்பகுதியைச் சார்ந்த மக்களுடன் எழுப்பபடுவார். உதாரணமாக கூறினால், அன்றாட வாழ்க்கையில், ஒரு பேரழிவு அல்லது பிற உயிரிழப்புகளை நாம் பார்க்கின்றோம். அத்தகைய பேரழிவுகளில் நூறு அல்லது இலட்சக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். அம்மக்களைப் பொறுத்தவரையில் அது அவர்களின் இறுதி தருணமாகும் அதாவது அவர்களின் இறுதி நாள். தொடர்ந்து அவர்கள் பர்ஸக்கினை கடந்து சென்ற பின் தங்களது கடைசித் தீர்ப்பை சந்திப்பார்கள். அப்போது மட்டும்தான் தங்களது இறுதி இலக்கு என்ன என்பது அவர்களுக்கு தெரியவரும்.

**"அந்த நேரம் எங்களுக்கு வரப்போவதில்லை என்று நிராகரிப்பவர்கள் கூறுகின்றனர். நீர் கூறுவீராக! அவ்வாறன்று**

**மறைவானதை அறியும் இறைவன் மேல் ஆணையாக நிச்சயமாக அது உங்களுக்கு வந்தே தீரும்" (34 : 4)**

உண்மையாக எல்லா ஒவ்வொரு மதமும் முதலில் கடவுளை வழிப்படும் மதமாகத்தான் இருந்தது. உதாரணமாக யூத மதம், கிறிஸ்தவ மதம் போன்றவை. ஆனால் அவர்களில் பெரும்பான்மையான மக்களும் மரணத்திற்கு பின்வரும் வாழ்க்கையிலும், இறுதி தீர்ப்பிலும் இன்று நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களை பொறுத்தவரையில் மரணத்தோடு அனைத்தும் முடிவடைகிறது. இதுவே அவர்களின் இறுதி வாழ்க்கை. ஆனால் வேறு சிலர் மறு பிறவியில் நம்பிக்கைக் கொள்கின்கின்றனர் அதாவது வெவ்வேறு பிற உடல்கள் வழியாக மறுபிறவி கொள்வார்கள் என நம்புகின்றனர். அது மனித பிறவியாகலாம் அல்லது விலங்கு பிறவியாகலாம் மேலும் மேலும் அவர்கள் பிறவியெடுத்து கொண்டே இருப்பார்கள். அது உடனடியாகலாம் அல்லது மரணத்திற்கு பின் நூற்றாண்டுகள் கடந்த பிறகும் ஆகலாம். இத்தகைய சிந்தனை மற்றும் நோக்கம் முற்றிலும் தவறான ஒன்றாகும்.

முஸ்லீம்களாகிய நம் நம்பிக்கைக்கு ஆறு தூண்கள் உள்ளன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும். நம் நம்பிக்கை இவ்வாறாகும். அதாவது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை அவனது மலக்குகளின் மீதான நம்பிக்கை, அவனது கித்தாப்புகளின் மீதான நம்பிக்கை, அவனது தூதர்கள் மீதான நம்பிக்கை, இறுதி நாளின் மீதான நம்பிக்கை, மரணத்திற்கு பிறகு வரும் வாழ்கையின் மீதான நம்பிக்கை (நன்மையும் தீமையும் அல்லாஹ்வின் அறிவு மற்றும் சட்டத்தின் மூலம் வருகிறது) போன்றவை மறுக்க முடியாத உண்மையாகும்.

எனினும் திருக் குருக் குர்-ஆன் நம்முடைய நம்பிக்கையின் காரியத்தில் இரண்டு தூண்களைப் பற்றியே அதிகமாக கவனம் செலுத்துகிறது. அதாவது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை மற்றும் தீர்ப்பு நாளின் மீதான நம்பிக்கை ஆகியவையைப் பற்றி திருமறை குறிப்பாக எடுத்துரைக்கிறது. ஹதீஸுகளில் இந்த இரண்டு காரியங்களைப் பற்றி நமது அன்புக்குரிய தூதர் முஹம்மது (ஸல்)

அவர்கள் அதிகமாக கூறியிருக்கிறார். திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். **“உங்களுள் அல்லாஹ்விடத்தும் இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொள்பவர்க்கு இது அறிவுரையாகும்” (2:233)**

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக காணலாம். **“அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளுபவர் சிறந்த முறையில் பேசுபவராக இருக்கட்டும் அல்லது அவர் மௌனமாக இருக்கட்டும்” (புகாரி)**

இந்த கதீஸின்படி, அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஈமான் கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கையாளர், அவநம்பிக்கையாளரிடம் மிக சிறந்த முறையில் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். நம்பிக்கை கொண்ட எவர் ஒருவரும் ஒரு நாள் இறப்பை சந்திப்பார். பின்னர் அவரை அல்லாஹ்வின் நீதி மன்றத்திற்கு முன்பாக அழைத்து வரப்படும். பின்னர் அவர் சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்ல வேண்டும். இதை நன்கு அறிந்தவர் அதற்கு தடையாக இருக்கும் ஒரு வாழ்க்கையை அமைக்க கூடாது. மாறாக அல்லாஹ்வுக்கு அஞ்சி, பயபக்தியுடன் வாழ வேண்டும். அவர் ஒரு அவநம்பிக்கையாளரைப் போன்று நடந்துக் கொள்ள கூடாது.

ஒரு அவநம்பிக்கையாளரை பொறுத்தவரையில் அவர் விரும்பும் வகையில் வாழ்ந்துக் கொள்வதற்கான சுதந்திரம் அவருக்கு உண்டு. அது இஸ்லாமிய போதனைகளுக்கு எதிராகயிருந்தாலும் கூட! ஆனால் ஒரு முஸ்லீம், ஒரு சிறந்த நம்பிக்கையாளரைப் போன்றே நடந்துக் கொள்ள வேண்டும். ஒரு உண்மையான விசுவாசி இறைகட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும். அவர் பெயரில் மட்டும் முஸ்லீமாக இருக்க கூடாது. அவ்வாறேயானால் அவருக்கும் விசுவாசிக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லாமல் இருக்கும். ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் கோபத்தை ஈர்த்துக் கொள்ளும் வகையிலான அனைத்துச் செயல்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் அன்பு மற்றும் திருப்தியினை ஈர்ப்பதற்காக நீங்கள் இஸ்லாமிய கட்டமைப்பை உறுதியாக கடைபிடியுங்கள். இன்று அல்லது நாளை தனது செயல்களுக்கு கணக்கு கேட்பவனாகயிருக்கும் தன்னுடைய படைப்பாளனிடம் திரும்ப செல்ல வேண்டும் என்று ஒரு உண்மையான நம்பிக்கையாளர் நன்கு உணர்ந்தவராக இருப்பார். இறைவன் மீதான அவரது பயம் காரணமாக தடை செய்யப்பட்ட அனைத்து வகையான காரியங்களிலிருந்தும் அவர் விலகி நிற்பார். உண்மை இதுவாகும், அதாவது ஒரு நம்பிக்கையாளரைப் பொறுத்தவரையில் இவ்வுலக வாழ்க்கை என்பது ஒரு சோதனையாகும். நாம் அனைவருக்கும் விதி எழுதுபவனாக அல்லாஹ் இருக்கின்றான். நமது ஒவ்வொரு செயல்களைக் குறித்தும் அல்லாஹ்வின் முன் பரிசோதனைக்கு வைக்கப்படுகிறது. பின்னர் நமது இறுதி இலக்கு சொர்க்கமா அல்லது நரகமா என்பதை தீர்மானிக்கப்படுகிறது. விதி நாளினில் விதிக்கப்பட்ட ஆன்மாவுக்கு அதற்குரிய பலனை முழுமையாக பெற்று விடலாம். அவர் நல்லவராகவும், இறை கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து கொண்டவராகவும் இருந்தால், அவர் நல்ல பலனைப் பெறுவார். அல்லாஹ்வின் இன்பம் மற்றும் அவனது சொர்க்கத்தில் ஒரு இடம் ஆகியவை அவருக்கு கிடைத்து விடும். ஆனால் அவர் கெட்டவராகவும் இறை கட்டளைகளுக்கு கீழ் படியாதவராகவும் இருந்தால், அவர் மிக மோசமான பலனைப் பெறுவார். நரகத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட காலம் அல்லது நித்திய காலம் வரை அவர் இருப்பார். அது அவரது நோக்கங்கள் மற்றும் செயல்களை பொறுத்திருக்கும். பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களையும் அல்லாஹ் அழிக்கிற நாளினையும் இறுதி நாள் என கூறலாம். பூமிக்கும் அதில் குடியிருப்போர்களுக்கும் இறுதி மணி நேரம்! பின்னர் அல்லாஹ் அவர்களை உயிர்த்தெழுப்பிக் கொள்வதுடன் அவனது நீதியைக் குறித்து அவன் அவர்களை உணரவைப்பான். அல்லாஹ் கூறுகின்றான், **“அந்த நேரம் வந்தே தீரும் அதில் ஐய்யத்திற்கு இடம் இல்லை. ஆனால் பெரும்பாலும் மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை” (40 :60)**

**“அது உண்மைதானா என்று அவர்கள் உம்மிடம் வினாவுகின்றனர். (நீர் அவர்களிடம்) கூறுவீராக! ஆம்! என் இறைவன்**

மேல் ஆணை, நிச்சயமாக அது முற்றிலும் உண்மையே. உங்களால் செயலிளக்கச் செய்ய முடியாது”. (10 : 54)

இப்னு உமர் (ரலி) அவர்கள் விவரிக்கின்றார். இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “உயிர்த்தெழுதலின் நாளின் போது இறைவன் தனது நேர்மையான அடியாரின் அருகில் வந்து, அவரை மன்னித்து, அவரது பாவங்கள் மீது திரையிட்டு அதனை மறைத்துக் கொள்வான். பின்னர் அல்லாஹ் அவரிடம் கேட்பான் நீ செய்த இத்தகைய பாவங்களைக் குறித்து உனக்கு ஞாபகம் இருக்கின்றதா? அதனை நீ ஒத்துக் கொள்கிறாயா? அந்நேரம் அவர் பதிலளிப்பார் ஆம் என் இறைவா நான் ஒப்புக் கொள்கிறேன். அந்நிலையில் அல்லாஹ் அவரிடம் கூறுவான் இம்மையில் நீ புரிந்த இத்தகைய பாவங்களை நான் மறைத்து வைத்தேன். இன்று உன் பாவங்களை நான் மன்னிக்கிறேன். பின்னர் அவர் புரிந்த நற்செயல்களைக் கொண்ட பதிவு புத்தகம் அவருக்கு வழங்கப்படும். பின்னர் அவநம்பிக்கையாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களை அனைத்தும் அல்லாஹ்வின் முன் அழைத்து வரப்படும். பின்னர் அவர்களிடம் இவ்வாறு கூறப்படும். “இவர்கள் தங்களது இறைவனைப் பற்றி பொய்யுரைத்தவர்கள் இத்தகைய அடக்கு முறைகளை கையாண்ட இவர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் இறங்கட்டும்”. (புகாரி, முஸ்லீம்)

விதி நாளின் மீதான நம்பிக்கை, வாழ்க்கை, மரணம், இறுதியாக தங்குமிடம், சொர்க்கம் மற்றும் நரகம் போன்றவை ஒன்றுக்கொன்று இணைந்திருக்கிறது. ஏனெனில், அல்லாஹ்வின் இறுதி நியாயத் தீர்ப்புக்கு பின்பு தான், நாம் நித்திய இன்பம் அல்லது நித்திய தண்டணையை அனுபவிக்கிறோம். அது நமது நல்ல மற்றும் கெட்ட செயல்களை பொறுத்திருக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான், “நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றவர்களே படைப்புகளுள் மிகச் சிறந்தவர்களாவார். அவர்களின் இறைவனிடத்தில் அவர்களுக்குரிய வெகுமதி, என்றென்றும் நிலைத்திருக்கும் தோட்டங்களாகும்.

அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடும். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து வருவர். அல்லாஹ் அவர்களைப் பற்றி திருப்தி கொண்டுள்ளான் அவர்கள் அவனைப் பற்றியும் திருப்தி கொண்டுள்ளனர். அது தமது இறைவனுக்கு அஞ்சி நடக்கின்றவருக்குரியதாகும்” (98 : 8, 9)

“அநீதி இழைப்பவர்களுக்கு நிச்சயமாக நாம் நெருப்பொன்றை ஆயத்தப்படுத்தியுள்ளோம். அதன் (சுடர்ச்) சுவர் அவர்களை சூழ்ந்து கொள்ளும். இவர்கள் உதவிக் கோரி கதறினால் உருகிய செம்பைப் போன்ற நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். அது அவர்களின் முகங்களைச் சுட்டெரிக்கும். அது எவ்வளவு மோசமான பானமாகும்! (அந்த நெருப்பு) எவ்வளவு கெட்ட தங்குமிடமாகும்!

(18 : 30)

அல்லாஹ் நீ எங்கள் மீது கருணை காட்டுவாயாக! எங்கள் பலவீனங்களையும் பாவங்களையும் மன்னிப்பாயாக! இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவனது திருப்தி மற்றும் மகிழ்ச்சியின் வாசல் நமக்காக திறந்திருக்கட்டும். நற்செயல்களைக் கொண்டு அமையும் ஒரு எதிர்காலம் அவன் நமக்கு வழங்கட்டும். இறைவனின் நித்திய மகிழ்ச்சி என்றென்றும் நம் மீது உண்டாகட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

## NATIONAL AND INTERNATIONAL

**MUKARRAM SALEEM SAHIB**
*(Naib Amir Tamil Nadu)*
**Tamil Nadu and National Level**
**Contact No: 8903398355**

**MUKARRAM FAZIL JAMAL SAHIB**
*(Naib Amir Delhi)*
**National and International Level**
**Contact No: 9711237484**
**Blog:** www.sahih-al-islam.blogspot.in

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109